யாதவர் கல்லூரி, (தன்னாட்சி) மதுரை –14

# தமிழ் உயராய்வு மையம்

# வரலாறு

பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்விக்காக தொலைநோக்குச் சிந்தனையுடன் 1969 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது மதுரையில் அமைந்துள்ள யாதவர் கல்லூரி. இக்கல்லூரி தொடங்கப்பட்ட **1969** ஆம் ஆண்டிலிருந்து தமிழ்த்துறை இயங்கி வருகின்றது. **1969** ஆம் ஆண்டு பகுதி **1** தமிழும், **1970-1971** ஆம் ஆண்டில் இளங்கலைத் தமிழும், **1980-1981** ஆம் ஆண்டில் முதுகலைத் தமிழும், **1984-1985** ஆம் ஆண்டில் இளநிலை ஆய்வுப் படிப்பும், **1985-1986** ஆம் ஆண்டில் **08.09.1986** அன்று ஆய்வியல் நிறைஞர் பட்டமும் தொடங்கப்பட்டு **பொன்விழா** கண்ட தமிழ் உயராய்வு மையமாக இன்று வரை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

இத்துறையில் பல்வேறு சிறப்பு வாய்ந்த அறிஞர்கள் பணியாற்றியுள்ளனர். கல்லூரியின் முதல் முதல்வராக இருந்த **தி.அ.சொக்கலிங்கனார்,** மற்றும் சட்டப்பேரவைத் தலைவர் மற்றும் அமைச்சராக இருந்த தனித்தமிழின் முன்னோடி **மு.தமிழ்க்குடிமகன்** துறைத்தலைவராக இருந்த பெருமையுடையது இந்த தமிழ் உயராய்வு மையம் என்பது குறிப்பிடத்தக்கது.இத்துறையில் பயின்ற பல்வேறு மாணவர்கள் தமிழகமெங்கும் பல்வேறு அரசுத் துறைகளில் திறம்படச் செயலாற்றி வருகின்றனர். சிந்து சமவெளி ஆய்வினை வெளிப்படுத்தி ஒரிசா மாநிலத்தின் தலைமைச் செயலாளராக இருந்த **ரெ.பாலகிருஷ்ணன் இ.ஆ.ப** அவர்கள் எங்கள் துறையின் முன்னாள் மாணவர் என்பதில் பெருமிதம் கொள்கின்றோம்.**தேசிய விருது பெற்ற திரைப்பட இயக்குநர் அகத்தியன்** திரைத்துறையிலும், மற்றும் இங்கு முனைவர்ப்பட்டம் வரை பயின்ற மாணவர்கள் பலரும் தமிழகம் முழுவதும் பல்வேறு அரசு மற்றும்

அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பேராசிரியர்களாகவும், பள்ளிகளில் ஆசிரியர்களாகவும், இதழியல் துறையிலும் பணியாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பணியாற்றிய பேராசிரியர்கள்

1. பேரா. தி.அ.சொக்கலிங்கனார்
2. முனைவர் மு.தமிழ்க்குடிமகன்
3. முனைவர் ந.ராமலிங்கம்
4. முனைவர் இ.கி.இராமசாமி
5. முனைவர் இரா.கோதண்டபாணி
6. முனைவர் கா.இராமானுசம்
7. முனைவர் சுசீலா கோபாலகிருஷ்ணன்
8. பேரா.இரா.இராமச்சந்திரன்
9. முனைவர் சொ.செயபாண்டியன்
10. முனைவர் க.கோவிந்தன்
11. முனைவர் எஸ்.செய்யது கவுசு
12. பேரா.மு. சேக் அப்துல் காதர்
13. முனைவர் வெ.மு.சாசகான் கனி
14. பேரா.இரா.கண்ணகி
15. முனைவர் கோ.செகநாதன்
16. முனைவர் வீ.மோகன்
17. முனைவர் வீ.கோபால்
18. முனைவர் க.முத்துக்கிருஷ்ணன்
19. முனைவர் இரா.சுப்பையா
20. முனைவர் ஔடை.தமிழ்ச்செல்வன்
21. முனைவர் இரா.பேபி.கிருஷ்ணம்மாள்

போன்ற பேராசிரியர்கள் தங்கள் பணியினைத் திறம்படச் செய்து வந்துள்ளனர்.

## துறைத்தலைவர்கள்

1. பேரா.தி.அ.சொக்கலிங்கம் – **09.06.1969 – 05.10.1978**
   நிறுவன முதல்வர் மற்றும் துறைத்தலைவர்
2. முனைவர் மு.தமிழ்க்குடிமகன் – **06.10.1978 – 24.12.1988**
   முதல்வர் மற்றும் துறைத்தலைவர்
3. முனைவர் ந.இராமலிங்கம் – **25.12.1988 – 30.06.1995**
4. முனைவர் இ.கி.இராமசாமி – **01.07.1995 – 31.05.2002**
5. முனைவர் கோ.செகநாதன் – **01.06.2002 – 30.09.2008**
6. முனைவர் வீ.மோகன் – **01.10.2008 – 31.05.2019**
7. முனைவர் ஆ.த.பரந்தாமன் – **01.06.2019** முதல் **.....**

## பணியில் இருப்பவர்கள்

1. முனைவர் ஆ.த.பரந்தாமன்
2. முனைவர் மா.நடராசன்
3. முனைவர் செள.மைதிலி
4. முனைவர் எ.பால்சாமி
5. முனைவர் க.முத்துமாரியம்மாள்
6. முனைவர் ஆ.முத்துக்கருங்கன்
7. முனைவர் அ.திலகராஜ்
8. முனைவர் இரா.செந்தில்குமரன்
9. முனைவர் கோ.பாலாஜி
10. பேரா.நீ.திருநாவுக்கரசு

மேற்குறிப்பிட்ட **10** பேராசிரியர்களில் **9** பேராசிரியர்கள் முனைவர்ப்பட்டம் பெற்றவர்கள். **3** பேராசிரியர்கள் முனைவர்ப்பட்ட ஆய்வு நெறியாளர்களாக இருந்து வருகின்றனர்.

## ஆய்வுப்பணிகள்

ஆய்வுப்பணியில் தமிழ் உயராய்வு மையம் சிறந்து விளங்குகின்றது. **100**க்கும் மேற்பட்ட இளநிலை ஆய்வாளர்கள் மற்றும் **45** க்கும் மேற்பட்ட முனைவர்ப்பட்ட ஆய்வாளர்கள் தங்களது ஆய்வினைச் செம்மையாக முடித்துச் சென்றுள்ளனர். பல்கலைக்கழக மானியக்குழுவினால் வழங்கப்பெறும் ஆய்வு உதவித்தொகை மற்றும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக வழங்கப்பெறும் ராஜிவ்காந்தி உதவித்தொகை ஆகியவற்றை மாணவர்கள் பெற்று தங்களின் ஆராய்ச்சிப்பணியைச் சிறப்பாக நிறைவு செய்கின்றனர்.பேராசிரியர்கள் தங்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளை பல்கலைக்கழக மானியக்குழுவின் அங்கீகாரம் பெற்ற இதழ்களில் வெளியிட்டுள்ளனர்.அவ்வப்போது மாணவர்களிடையே ஆய்வுக்கண்ணோட்டத்தை வளர்க்கும் நோக்கில் வாரந்தோறும் மூன்றாம் நாள் பாடவேளையில் முதுகலை மாணவர்களுக்கான “**வெள்ளியரங்கம்**” என்னும் தலைப்பில் ஆய்வரங்கமும், ஆறாம் நாள் பாடவேளையில் முனைவர் பட்ட மற்றும் இளநிலை ஆய்வாளர்களுக்கென “**ஆய்வாளர் அரங்கம்**” என்னும் ஆய்வரங்கமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## பாடத்திட்டம்

மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை பாடத்திட்டங்கள் காலச்சூழலுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டு மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்படுகின்றது.இளங்கலை மாணவர்களுக்கு பருவத்திற்கு ஒரு தாள் வீதம் நான்கு பருவங்களுக்கு இதழியல் தொடர்பான தாளினைப் பாடத்திட்டத்தில் சேர்த்து அவர்களின் இதழியல் அறிவினை மேம்படுத்துவதோடு படித்து முடித்தவுடன் இதழியல் துறையில் பணியாற்றுவதற்கு வாய்ப்பும் வழங்கப்படுகின்றது. மேலும் இளங்கலை மூன்றாமாண்டு பாடத்திட்டத்தில் தமிழ்நாடு அரசின் போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையில் போட்டித்

தேர்வுத் தமிழ் என்ற ஒரு பாடமும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் இளங்கலை மூன்றாமாண்டு மாணவரகளுக்கு இதழியல் தொடர்பான சான்றிதழ் படிப்பும் உள்ளது. முதுகலை பயிலும் மாணவர்கள் நான்காம் பருவத்தில் ஏதேனும் ஒரு செய்தித்தாள் நிறுவனத்திற்கு சென்று **10** நாட்கள் கள ஆய்வு மேற்கொண்டு இதழியல் பணிகளைக் கற்றுக்கொள்ள **மக்கள் தகவல் தொடர்பியல் பயிற்சி** என்னும் தாள் ஒன்றும் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளது. இந்த வகை பாடத்திட்டத்தால் மாணவர்கள் எளிய முறையில் இதழியல் துறைக்குப் பணிக்குச் செல்லும் வகையில் வழிவகை ஏற்படுகின்றது. மேலும் இளங்கலை, முதுகலை மாணவர்கள் நாட்டுப்புற வழக்காறுகளைத் தெரிந்துகொள்ளும் வகையில் நாட்டுப்புறவியல் பாடமும் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளது. முதுகலை மற்றும் ஆய்வு மாணவர்கள் பல்கலைக்கழக மானியக்குழுவினால் நடத்தப்பெறும் தேசிய மற்றும் மாநில உதவிப்பேராசிரியர் தகுதித் தேர்வில் **(UGC NET & SET)** வெற்றி பெறும் வகையில் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன. பல்வேறு மாணவர்கள் தேர்வில் வெற்றியும் பெற்றுள்ளனர்.

## நிகழ்வுகள்

மாணவர்களை கல்வியில் மட்டுமல்லாது பிற செயல்பாடுகளிலும் ஈடுபடுத்தும் நோக்கில் ஆண்டு தோறும் **முத்தமிழ் விழா, மற்றும் தமிழ்ச்சாரல் - மாநில அளவிலான அனைத்துக் கல்லூரி இலக்கிய நிகழ்த்துக் கலைப்** போட்டிகளும் நடத்தப்படுகின்றது. இந்நிகழ்வு முழுமையும் மாணவர்கள் திறமையை ஒருங்கிணைக்கும் நிகழ்வாகும். இவை தவிர ஆண்டு தோறும் தமிழர் திருநாளாகிய **பொங்கல் விழா** சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.மேலும் மாணவர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.**விளையாட்டு, தேசிய மாணவர்படை, நாட்டுநலப்பணித்திட்டம்** ஆகியவற்றில் ஈடுபட மாணவர்கள் பெருமளவில் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். மேலும் **2020** ஆம் கல்வியாண்டில் இருந்து இணையவழிக் கருத்தரங்கம் நடத்தப்பெறுகின்றது. இக்கருத்தரங்குகளில் தமிழகம் மற்றும் கேரளா, ஆந்திரா போன்ற பல்கலைக்கழகங்களிலிருந்து கருத்துரையாளர்கள் உரையாற்றியுள்ளனர்.இதில் இந்தியா

மட்டுமல்லாது இலங்கையிலிருந்தும் பார்வையாளர்கள் கலந்துகொண்டு சிறப்பிப்பது எங்கள் துறையின் செயல்பாடுகளில் மற்றுமொரு மைல் கல்லாகும். இத்தகைய துறையில் நடக்கும் நிகழ்வுகள் மாணவர்களை எளிதில் சென்றடையும் வகையில் யூடிப் **(YOUTUBE)** சேனல் ஒன்று துறைக்காக தனியாக உருவாக்கப்பட்டு அதில் துறைசார்ந்த நிகழ்வுகள் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.மாணவர்கள் இளங்கலை, முதுகலை படிக்கும் காலங்களிலேயே ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுவதற்கு ஊக்கப்படுத்தப்படுகின்றனர். மேலும் பல்வேறு திறன்களை வளர்க்கும் நோக்கில் வெளி கல்லூரிகளில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்ளவும் மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்

## நூலகம்

தமிழ் உயராய்வு மையத்தில் மாணவர்களுக்கென்று தனியாக நூலகம் ஒன்று அமைந்துள்ளது. இந்த நூலகத்தில் தமிழ் இலக்கியம் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான **2891** நூல்களும், **200** க்கும் மேற்பட்ட மின்னூல்களும், சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இளநிலை ஆய்வாளர்களின் ஆய்வேடுகள், மற்றும் **45** க்கும் மேற்பட்ட முனைவர்ப்பட்ட ஆய்வேடுகளும் இடம்பெற்றுள்ளன. மேலும் **பெரியாரின் குடியரசு இதழும்** நூலகத்தில் இருப்பது ஆய்வாளர்களுக்கு பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளது. மேலும் தமிழகம் முழுவதும் உள்ள பல்வேறு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களிலிருந்து ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வு தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக எங்கள் துறை நூலகத்தைப் பயன்படுத்திச் செல்கின்றனர்.

## இதர பணிகள்

பேராசிரியர்கள் கல்விப்பணி மட்டுமல்லாது பிற கல்லூரிப் பணிகளிலும் தங்களை இணைத்துக்கொண்டு தொண்டாற்றி வருகின்றனர். மாணவர்களின் மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருந்து வளர்ச்சியில் பங்கெடுத்துள்ளனர். மேல்நிலைப்படிப்பை முடித்த மாணவர் இளங்கலைத் தமிழ் பயில வந்தால் முனைவர்பட்டம் பெற்றுச் செல்லும் அளவிற்கு தமிழ் உயராய்வு

மையமானது வானளாவ உயர்ந்து நிற்கிறது. மேலும் இங்கு பயிலும் மாணவர்களுக்கு பேராசியர் வேலைவாய்ப்புகளில் இங்கு முன்னுரிமை வழங்கப்படுவது குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்றாகும்.